
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 4 | அக்டோபர் 1991 | இதழ் 10



வெளியிடுவோர் :

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்

2, மணல் மேடு வீதி, ஈரோடு-638 002

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளை களோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை

,, : ,, 11-00—12-00...ஞாயிறு பள்ளி

,, : மாலை 7-15—8-30...மாலை ஆராதனை

செவ்வாய்
புதன் } : மாலை 7-15—8-30...குடும்ப ஜெபக்கூட்டம்

வியாழன் : மாலை 7-15—8-30...வேதாகம ஆய்வு
(இரண்டாம் வியாழன் மாதாந்திர ஜெப
ஆராதனை மாலை 5-00 - இரவு 9 மணி

வெள்ளி : மாலை 7-15 - 8-30 குடும்ப ஜெபம்

சனி : மாலை 7-00 9-00...மன்ருட்டு ஜெபம்

## இதழின் உள்ளே


1. பரிசுத்த ஆவியானவர் ஒரு கிறிஸ்தவனுக்குள் வாசம் செய்வதில் நோக்கமும், அதன் செயல்பாடுகளும் 1-8
2. நியாயப்பிரமாணம், இசைக்கருவிகள் மற்றும் அற்புத அடையாளங்கள் 9-16
3. ஒரு நல்ல மனைவியாக இருப்பது எப்படி 17-19
4. 1 கொரிந்தியர் 13:8-13 கூறுவது என்ன? 20-27
5. கிறிஸ்தவம் தலைத்தோங்க தடை என்ன? 28

# THIRUMARAI AASAAN

Editor
E.Z. SELVANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
2, Manalmedu Street, ERODE-638 002, Tamil Nadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol 4. October—1991 Issue 10


**ஆசிரியவுரை**

# பரிசுத்த ஆவியானவர் ஒரு கிறிஸ்துவனுக்குள் வாசம் செய்வதின் நோக்கமும் அதன் செயல் பாடுகளும்.

**அ. பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்தவர்களை முத்திரையிடுகிறார் (எபே 1:13)**

*பாவத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு, இரட்சிக்கப்பட்டவர்கள் கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள் என்று அதற்குப் பொருள்.*

**ஆ.** *கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள் அனைவருக்கும் உரிய சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அதை உரிய காலத்தில் தேவன் கொடுப்பார் என்பதற்கு உத்தரவாதமாக* **பரிசுத்த ஆவியை அச்சாரமாக** *(கிரயத்தின் ஒருபகுதியை முன்னதாக கொடுத்தல்) கொடுத்திருக்கிறார் (எபே 1:14)*

**இ. பரிசுத்த ஆவியானவர் வாக்குக்கடங்காத பெருமூச்சோடு கிறிஸ்தவர்களின் சார்பில் வேண்டுதல் செய்கிறார்** *ரோமர். 8:26*

*அப்படிச் சொல்லும் போது ஒரு கிறிஸ்தவன் ஜெபிக்க வேண்டியதே இல்லை; எல்லாவற்றையும் பரிசுத்த ஆவியானவரோ பார்த்துக் கொள்வார் என்று பொருள் அல்ல. (தற்காலத்தில் உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம். உங்கள் ஜெப வேண்டு*

கோள்களை எங்களுக்கு அனுப்புங்கள் என்று விசுவாசிகளை திசை திருப்பி நம்ப வைக்க சில பேர் இந்த வசனத்தை தவறாக பயன் படுத்துகிறார் என்று விசனத்தோடு குறிப்பிடுகிறேன்.) ஒவ்வொரு கிறிஸ்தவனும் தானாக கர்த்தரிடத்தில் மன்றாடி ஜெபிக்க வேண்டும் என்பதை கீழ்வரும் வசனங்கள் வலியுறுத்துவதை கவனியுங்கள். **இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்.** *(தெச 5:17)* பரிசுத்தமாய் ஜெபிக்க வேண்டும் (யாக் 5:16) **நீங்கள் ஒன்றுக்கும் கவலைப் படாமல் எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள்''** பிலி 4:6) **சோர்ந்து போகாமல் ஜெபம் பண்ணுங்கள்''** (லூக் 18:1) அவருடைய சித்தத்திற்கு இசைவாக கேட்க வேண்டும் (1 யோ 5:14) அப்படி ஒருவன் செய்யும் போது ஆவியானவர் நமது பலவீனங்களில் உதவி செய்கிறார் என்பதே அதன் கருத்து.

ஈ. **பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம் பண்ணுகிறார்.** *(1 கொரி 6:19)* என்கிற இந்த உண்மை நமக்கு உற்சாகமான, தெம்பூட்டக்கூடிய சிந்தனையைக் கொடுத்து நம்மை பரிசுத்தமாய் வாழத் தூண்டுகிறது. கிறிஸ்தவர்களுடைய சரீரம் பரிசுத்த ஆவியின் ஆலயமாயிருக்கிறது. (1கொரி 6:19) ஆகையால் நம்முடைய சரீரத்தை தூய்மையாகவும், பரிசுத்தமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும். பரிசுத்தமாய் வாழ்ந்து நம்முடைய சரீரத்தினாலும் ஆவியினாலும் தேவனை கனம் பண்ண வேண்டும். ஏனெனில் ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய மீட்புக்காகவும், இயேசுகிறிஸ்துவின் விலைமதியாத, மாசற்ற இரத்தம் கிரயமாக செலுத்தப்பட்டிருக்கிறது. எனவே உலகத்தின் ஆசாவாசங்களை விட்டு வெளியேறி சரீரம், ஆவி ஆசியவைகளை கறைபடுத்தும் எல்லா விதமான அசுத்தங்களையும் களைந்து போட்டு பரிசுத்தத்தில் பூர்ணப்பட வேண்டும் (1கொரி 6:17-7;1)

நமக்குள்ளே வாசம் செய்கிற பரிசுத்த ஆவியானவர் செயல் படும் விதம் பற்றி கிறிஸ்தவர்களிடையே கருத்து வேறுபாடுகள் உண்டு. சிலர் பரிசுத்த ஆவியானவர் நேரடியாக விசுவாசிகளை ஆட்கொண்டு மர்மமான முறையில் செயல்படுகிறார் என்று நம்புகின்றனர், போதிக்கின்றனர். வேறுசிலர் அவருடைய பட்டயமாகிய வேதவசனத்தின் மூலமாகக் கிரியை செய்கிறார் என்கின்றனர். எது உண்மை என்று கண்டு கொள்வதற்கு, முதலாவது புதிய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டுள்ளபடி, பரிசுத்த ஆவியானவர் அனுப்பப்பட்ட பிரதான நோக்கம் என்ன என்று பார்ப்போம்.

இயேசுகிறிஸ்து இவ்வுலகத்தில் வாழ்ந்த காலத்தில் தம்முடைய அப்போஸ்தலர்களிடம், அவர்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்த, தான் போய், பரிசுத்த ஆவியை அனுப்புவேன் என்று சொன்னார் (யோ 16:7,13) இங்கே சத்தியம் என்று குறிப்பிடப்பட்டிருப்பது தேவனுடைய வசனத்தைத்தான் என்று நமக்கு தெரியும். (யோ 17:17) அவர்களுக்கு வாக்குக் கொடுத்தபடியே அவர் பரமேறிச் சென்ற சில தினங்களில் பரிசுத்த ஆவியானவர் அனுப்பப்பட்டார். (அப் 2:1-4) அவர் சத்தியத்தை வெளிப்படுத்தினபடியால் அவருக்கு சத்திய ஆவி என்ற பெயரும் உண்டு (யோ 15:26;16:13) முதலாம் நூற்றாண்டு முடிவதற்குள் அவர் அப்போஸ்தலர்களையும், சில பரிசுத்த மனிதர்களையும் பயன்படுத்தி சகல சத்தியங்களையும் வெளிப்படுத்தி உறுதிசெய்து விட்டார் (2 பேது 1:20, 21;எபி 2:3, 4) அதனால்தான் அதை யாக்கோபு பூரண பிரமாணம் என்கிறார் (யாக் 1:25)

மேற்சொன்ன வசனங்களின்படி அப்போஸ்தலர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்பட்டதற்கான காரணங்கள் வருமாறு :-

1) எல்லா சத்தியங்களையும் அப்போஸ்தலருக்குப் போதிப்பது (யோ 14:26)

2) இயேசு அவர்களுக்கு போதித்த எல்லாவற்றையும் தவறின்றி நினைவூட்டுதல் (யோ 14:26)

3) அவர்கள் ஆதிமுதல் (அப் 1;21,22) அவரோடே இருந்தபடியால் அவருக்கு சாட்சி பகர்தல் (யோ 15:27)

4) தேவனுடைய வசனமாகிய சகல சத்தியத்துக்குள்ளும் அப்போஸ்தலர்களை வழி நடத்துதல் (யோ 16:13)

5) வரபோகிற காரியங்களை முன்னறிவித்தல் (யோவான் 16:13)

6) அப்படி முழுமையாக வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்களைக் கொண்டு பாவத்தை குறித்தும், நீதியைக்குறித்தும் நியாயத்தீர்ப்பை குறித்தும் உலகத்தை கண்டித்து உணர்த்துதல் (யோவான் 16:8-11)

7) தங்கள் சுய சித்தத்தை பேசாமல் தேவனுடைய வார்த்தையாகிய சத்தியத்தை பேசுதல் (II பேதுரு 1:20,21)

8) அவர்கள் பேசுவது தேவனுடைய வார்த்தைகள் தான் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் அற்புத அடையாளங்களை செய்தல் (எபி 2:3-4)

இவைகளின் முழுநோக்கம் என்னவெனில் : பிற்காலத்தில் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் விசுவாசிகள், பரிசுத்த ஆவியான

வரின் துணை கொண்டு அப்போஸ்தலர்களுக்கும். ஆவியினால் ஏவப்பட்ட மனிதர்களுக்கும் வெளிப்படுத்தின வார்த்தைகளைக் கொண்டு இயேசுவே கிறிஸ்து என்று அறிந்து விசுவாசிக்க வேண்டும் என்பது தான் (யோவான் 17:20; 20:30, 31)

அதனால் தான் தேவனுடைய வார்த்தையை ஆவியின் பட்டயம் என்று வேதம் சொல்லுகிறது(எபே 6:17). அதாவது தேவனுடைய வார்த்தைகள் பரிசுத்த ஆவியின் கருவியாக இருந்து செயல் படுகிறது. இதிலிருந்து நாம் பரிசுத்த ஆவியானவர் நேரடியாக மர்மமான முறையில் கிறிஸ்தவர்களையோ, மற்ற மனிதர்களை-யோ ஆட்கொள்வதில்லை என்றும் அவருடைய பட்டயமாகிய வசனத்தின் மூலமாக செயல்படுகிறார் என்பது தானே!

பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்தவர்களை எப்படி தமது ஆவியின் பட்டயமாகிய தேவனுடைய வசனத்தைக் கொண்டு ஆட்கொள்ளுகிறார் என்பதை புரிந்து கொள்ள சமுதாயத்தில் நடைமுறையில் இருக்கிற சட்டம் ஒன்றை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். சாதாரணமாக ஒரு முதலாளியோ அல்லது ஒரு கம்பெனியோ தன்னுடைய அதிகாரம் பெற்ற ஆள் அல்லது ஏஜெண்ட் மூலமாக ஒரு காரியத்தைச்செய்தால் சட்டரீதியாக அந்த முதலாளியோ அல்லது கம்பெனியோ செய்ததாகத்தான் அர்த்தம். அதே சட்டம் வேதாகம காரியங்களுக்கும் பொருந்தும். அதற்கு ஆதாரமாக சில எடுத்துக்காட்டுகளை பார்ப்போம்.

அ. யோவான் 4:1ல் ''யோவானைப் பார்க்கிலும் இயேசு அநேகம் பேரை சீஷராக்கி ஞானஸ்நானம் கொடுக்கிறார் என்று பரிசேயர் கேள்விப்பட்டதாக கர்த்தர் அறிந்தபோது....'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் 3ம் வசனத்தில் ''இயேசு தாமே ஞானஸ்நானம் கொடுக்கவில்லை. அவருடைய சீஷர்கள் கொடுத்தார்கள்'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் 1ம் வசனத்தில் யோவானைக் காட்டிலும் இயேசு அதிகம் பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார் என்று சொல்லப்பட்டிருப்பது எப்படி? முரண்பாடா? இல்லை. இயேசு தாமே கொடுக்கவில்லை என்றாலும் அவருடைய அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகளும் பிரதிநிதிகளுமாகிய சீஷர்கள் கொடுத்தர்கள். இருந்தாலும் மேலே நாம் குறிபிட்ட சமுதாயச் சட்டத்தின்படி இயேசு கொடுத்ததாகவே ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் இயேசு கிறிஸ்துவின் கட்டளைகளின் பேரில் அவருடைய பிரதிநிதிகளான சீஷர்கள் செயல்பட்டார்கள்.

இன்னும் ஒரு எடுத்துக்காட்டை கூடப் பார்க்கலாம். தேவன் நம் அனைவரையும் கிறிஸ்தவர்களாகும்படி அழைக்கிறார்

என்று அர்த்தம் தொனிக்கும் வகையில் கீழ்வரும் வசனங்கள் அமைந்திருப்பதைக் கவனியுங்கள். (2 தீமோ 1:9;1 கொரி 1:9: 1தெச 2:11.) சிலர் இந்த வசனங்களை தவறாக புரிந்து கொண்டு தேவன் தங்களை விசேஷித்த முறையில் அசாதாரண முறையில் ஒரு தேவ தூதனைக் கொண்டோ, இதயத்தில் ஒரு இனந்தெரியாத உணர்வைஉருவாக்கியோஅழைப்பார் என்றோ எதிர்பார்க்கின்றனர். ஆனால் வேதாகமம் கூறுகிற உண்மை என்ன? உண்மையும் ஆத்மா பாரமும் உள்ள அவருடைய ஊழியர்கள் பிரசங்கிக்கிற சுவி-சேஷத்தின் மூலமாகவே அழைக்கிறார். (2 தெ 2:14) அதாவது ஆவியின் பட்டயம் என்று அழைக்கப்படும் தேவனுடைய வசனத்தைக் கொண்டுதான் அழைக்கிறார். நேரடியாகவோ, தேவதூதர் மூலமாகவோ, கனவு, தரிசனம் ஆகியவைகளின் மூலமா-கவோ அல்ல. இதை ஏற்றுக்கொள்வதற்கும், நிராகரிப்பதற்கும் ஒரு மனிதனுக்கு சுதந்தரம் உண்டு. (ரோமர் 10:16 ; 2 தெ 1:7,8 1 1பேதுரு 4:17)

மூன்றாவது எடுத்துக்காட்டாக, பரிசுத்த ஆவியானவர் மக்களைப் பரிசுத்தப் படுத்துகிறார் என்று கூறப்பட்டிருக்கிறது. (2தெச 2;13) பரிசுத்தப் படுத்துதல் என்பதற்கு பாவ வாழ்க்கை-யிலிருந்து விடுவித்து கர்த்தருடைய பணிக்கு அர்ப்பணிக்கும் மனப் பக்குவத்தை ஏற்படுத்துதல் என்று பொருள் கொள்ளலாம். ஆனால் சிலர் இதையும் அப்படித்தான் தவறாகப் புரிந்து கொண்டு சில மர்மமான முறையில் நேரடியாக இருதயத்திலும், மனதிலும் உள்ள அழுக்கைத் துடைத்துப் பரிசுத்தப்படுத்துவார் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் வேதாகமம் கூறுவது என்ன? ''உம்முடைய **சத்தியத்தினாலே** அவர்களைப் பரிசுத்த மாக்கும். உம்முடைய **வசனமே** சத்தியம்'' (யோவான் 17:17) அவர் **திருவசனத்தைக் கொண்டு** தண்ணீர் முழுக்கினால் **சுத்திகரித்துப்** பரிசுத்த மாக்குகிறதற்கும் .. (எபே 5 : 2 6); இயேசுவின் சித்தம், உடன்படிக்கையின் இரத்தம் ஆகியவைகளி-னாலே பரிசுத்தமாக்கப்படுகிறோம் (எபி. 10:10,29.)

ஷெ வசனங்களின் மூலம் நாம் அறிந்து கொள்வது என்ன? பரிசுத்த ஆவியானவர் நேரடியாகவோ அல்லது மர்மமான முறை யிலோ நம்மைப் பரிசுத்தப்படுத்துவதில்லை. முதலாம் நூற்றாண் டில் பரிசுத்த மனிதர்களைக் கொண்டு தாம் வெளிப்படுத்திய தேவனுடைய வசனம் என்னும் ஆவியின் பட்டயமாகிய ஆயுதத்-தைக் கொண்டு பரிசுத்தப்படுத்துகிறார் என்பதாகும்.

மேற்சொன்ன மூன்று எடுத்துக்காட்டுகளின் மூலமாக பரி-சுத்த ஆவியானவர் எவ்விதமாய் ஒரு மனுஷனை ஆட்கொள்கி-

றார் என்பதை வேதாகம உண்மைகளின் அடிப்படையில் அலசிப் பார்த்து ஒரு தீர்மானத்துக்கு வர முடியும்.

அ) பரிசுத்த ஆவியானவர் ஒரு கிறிஸ்தவனுடைய மனதை நேரடியாகவோ, மர்மமாகவோ, அசாதாரண முறையிலோ ஆட் கொள்வதில்லை.

ஆ) தேவனுடைய வார்த்தையாகிய ஆவியின் பட்டயத்தின் மூலமாகவே ஒருவனுடைய மனதை ஆட்கொள்கிறார் (எபே 6:17) அதாவது ஒரு கிறிஸ்தவன் உண்மை மனதோடு சத்திய வசனத்தைக் கேட்டோ, படித்தோ தியானித்து அதன்படி செய்து பயன் அடையலாம், அதை இன்னும் கொஞ்சம் தெளிவாகப் புரிந்து கொள்வதற்குக் கீழ்க் காணும் வசனங்களையும் பார்போம்.

1) 1தெச 2:13 தேவ வசனமானது விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது.

2) யாக் 1:21, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்ட வசனம் உங்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயிருக்கிறது.

3) கொலோ 1:6 நீங்கள் முன்னமே சத்திய வசனமாகிய சுவிசேஷத்தினாலே கேள்விப்பட்டீர்கள். அந்த சுவிசேஷம் உங்களுக்குள்ளே பலன் தருகிறதாயிருக்கிறது.

4) லூக் 8:8, 11, 15 நல்ல நிலத்தில் விழுந்த விதை முப்பதும், அறுபதும் நூறுமாகப் பலன் தந்தது, விதை தேவனுடைய வசனம், உண்மையும் உத்தமமுமுள்ள நிலமாகிய இருதயம், வசனத்தைப் பொறுமையோடு காத்துக் கனி தருகிறது.

5) சங் 119:11 நான் உமக்கு விரோதமாய்ப் பாவம் செய்யாதபடிக்கு உமது வாக்கை என் இருதயத்தில் வைத்தேன்.

வேதாகமத்தைப் புரிந்து கொள்வதற்கு, பரிசுத்த ஆவியானவரின் நேரடியான, மர்மமான அசாதாரணமான முறையில் நம்மை ஆட் கொள்ள வேண்டும் என்று சிலர் சொல்லுகிறார்களே, அதைப்பற்றி வேதாகமத்தின் கருத்து என்ன? என்று சிலர் கேட்கின்றனர் ஷ் கருத்து வேதாகமத்தின் கருத்து அல்ல. தயவு செய்து கீழ்க்காணும் வசனங்களை வாசித்து நீங்களே தீர்ப்புக் கூறுங்கள்.

1, சங் 19:8 கர்த்தருடைய **கற்பனை** தூய்மையும், கண்களைத் தெளிவிக்கிறதுமாயிருக்கிறது.

2. சங் 119:105 உம்முடைய **வசனம்** என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.

3. சங் 119:130 உமது **வசனத்தின்** பிரசித்தம் வெளிச்சம் தந்து பேதைகளை உணர்வுள்ளவனாக்கும்.

4. 2கொரி 4:4 தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான **சுவிசேஷத்தின்** ஒளி . . . .

5. எபே 3:3-5 இரட்சிப்பின் இரகசியத்தை அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் ஆகியோர் மூலம் சொல்லப்பட்ட வார்த்தைகளின் மூலமாக வெளிப்படுத்தினார். நாம் அந்த **வார்த்தைகளைப்** படித்துத் தியானித்தால் அந்த இரகசியத்தைப் புரிந்து கொள்ளமுடியும்.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் வெளிச்சத்தில் நாம் பிரகாசிக்கப்படுவதற்கு, வேதாகமத்தைப் புரிந்து கொள்வதற்கு அசாதாரணமான, மர்மமான, நேரடியாக நம்முடைய உள்ளம் பரிசுத்த ஆவியினால் ஆட்கொள்ளப்பட வேண்டியதில்லை, கீழே சொல்லப்பட்டுள்ளபடி செய்தாலே போதும்.

1. முதலாம் நூற்றாண்டில் பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தியுள்ள தேவனுடைய வசனங்களை வாசித்து, தியானித்து, அவைகளை நம்முடைய அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும்.

2. அப்படி நாம் செய்வோமானால் நாம் அந்த அற்புதமான சத்தியத்தின் மூலம் ஞானத்தைக் கண்டடையலாம்.

எனக்குள் பரிசுத்த ஆவி வாசமாயிருக்கிறார் என்பது எனக்கு எப்படித் தெரியும் இது பலருடைய குழப்பத்துக்குக் காரணம். சிலர் இனம் தெரியாத ஒரு உணர்ச்சி, உடல் சிலிர்ப்பு, ஆவேசக் கூச்சல், நீராவியினால் ஓடும் ரயில் இன்ஜின் போல் அஸ், புஸ் என்ற ஒரு சப்தம் இப்படி ஏதாவது செய்தால் பரிசுத்த ஆவி வாசம் பண்ணுகிறார் என்று தெரிந்து கொள்ளமுடியும் என்று நம்புகின்றனர். அல்லது பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம் செய்கிறார் என்பதற்கு தேவன் ஒரு அடையாளத்தைத் தந்திருக்கிறார் என்று காட்ட வேண்டும் என்ற நினைப்பில் ''தத்து, பித்து'' என்று உளறி அது அந்நிய பாஷை என்று மற்றவர்களை நம்ப வைக்க முயலுகின்றனர். இது எல்லாம் அறியாமை கலந்த வரட்டுக் கௌரவம்.

நண்பர்களே, மனிதனுடைய ஆவி உங்களுக்குள் வாசம் செய்கிறது என்று நீங்கள் எப்படித் தெரிந்து கொள்கிறீர்கள்? அதை நீங்கள் பார்க்கவும், முகரவும், உணரவும் தொட்டுப் பார்க்கவும் முடியாது. இருப்பினும் உங்களுக்குள் மனித ஆவி வாசம்

செய்கிறார் என்று தேவனுடைய வசனம் சொல்லுகிறபடியினாலே அதை நீங்கள் அறிகிறீர்கள் (1தெச 5:23) அதே போல, நீங்கள் என்ன செய்தால் உங்களுக்குப் பரிசுத்த ஆவி கொடுக்கப்படும் என்று தேவனுடைய வசனத்தில் சொல்லியிருக்கிறதோ அப்படி நீங்கள் செய்தால் பரிசுத்த ஆவி உங்களுக்குள் வாசம் செய்கிறார் என்று அறிந்து கொள்ளலாம் மற்றபடி அவர் ஆவியாக இருக்கிற படியால் நாம் பார்க்கவோ, முகரவோ, உணரவோ, தொட்டுப் பார்க்கவோ முடியாது. ஆனால் நாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தால் அவர் நம்மில் வாசம் செய்கிறார் என்று அறியலாம் (அப் 5:32)

தேவனுடைய வசனம் சொல்லுகிறபடி நாம் தேவனை விசுவாசித்து, மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று தண்ணீரில் மூழ்கி திருமுழுக்குப் பெற்றுக் கொண்டால், பரிசுத்த ஆவியானவர் உங்கள் உள்ளத்தில் வசிக்க ஆரம்பித்து விடுகிறார். (அப் 2:38) நம்முடைய விசுவாசம் நாம் திருமுழுக்குப் பெற்றுக் கொண்டு தேவனுடைய பிள்ளையாக மாறும்படி உந்துமானால் அவர் பரிசுத்த ஆவியை நமக்குள் அனுப்புகிறார். (கலா 3:26,27;4:6) நாம் இவைகளையெல்லாம் தவறாமல் செய்தால் நமக்கு தேவன் கொடுத்த வாக்குறுதிப்படி பரிசுத்த ஆவியை நமக்கு நிச்சயம் தருவார். அப்பொழுது தான் நாம் கிறிஸ்தவர்கள் என்ற தகுதியை உடையவர்களாக இருப்போம் (ரோமர் 8:9) அதனால் அன்றோ நம்முடைய சரீரம் பரிசுத்த ஆவியின் ஆலயம் என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறார் (1கொரி 6:19) இவைகளையெல்லாம் அறியாமல் நடந்து கொண்ட கொரிந்து சபையாரைப் போல நீங்கள் குழப்பமடையாமல் தேவனுடைய வசனத்தை நூற்றுக்கு நூறு விசுவாசித்து உங்கள் இரட்சிப்பு நிறைவேற தேவனுடைய வசனத்தை விசுவாசித்து அதன்படி செயல்பட்டு பலன் அடையப் பிரயாசப்படுங்கள்.

**சார்லஸ் டிபால்மா**

---

**நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் எனினும் தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?**

**ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அவனை தேவன் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம்.**

**1 கொரி 3: 16,17**

---

# நியாயப்பிரமாணம், இசைக் கருவிகள் மற்றும் அற்புத அடையாளங்கள்

நாம் பலமுறை நியாயப்பிரமாணம், இசைக் கருவிகள், மற்றும் அற்புத அடையாளங்கள் சம்பந்தமாக வேதாகமம் என்ன போதிக்கிறது என்று தெளிவுபடுத்தியிருக்கிறோம். ஆயினும் இன்னும் சில பேர் இந்த விஷயங்களைப்பற்றி மேலும் தெளிவாகத் தெரிந்து கொள்ளும் ஆவலில் கேள்விகள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்குப் புரியும் வண்ணம் எங்களால் முடிந்த அளவுக்கு விளக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தொடர்ந்து அவைகளைப் பற்றி எழுதுகிறோம்.

பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு உள்ளிட்ட முழு வேதாகமுமே தேவனுடைய வார்த்தைகள் தான், (2தீமோ 3,16:17; 2பேதுரு 1:19-21) ஆயினும் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்று பிரிக்கப்பட்டிருப்பதை வைத்தே இவைகள் வெவ்வேறு காலத்தில் வித்தியாசப்பட்ட சூழ்நிலையில் வாழ்ந்த மக்களுக்கு எழுதப்பட்டவைகள் என்று புரிந்து கொள்ளலாம். ஆகையால் ஒரு உடன்படிக்கையின் கீழ் கொடுக்கப்பட்ட பிரமாணங்கள் மற்றொரு உடன்படிக்கையின் கீழ் வாழுகின்ற மக்களைக் கட்டுப்படுத்தாது என்று தெளிவாகிறது. ''ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்தில் நடந்த அக்கிரமங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு அவர் மரணமடைந்து அழைக்கப்பட்டவர்கள் வாக்குத் தத்தம் பண்ணப்பட்ட நித்திய சுதந்திரத்தை அடைந்து கொள்வதற்காக புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்.

ஏனென்றால் எங்கே மரண சாதனமுண்டோ அங்கே அந்த சாதனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாக வேண்டும்.

எப்படியெனில், மரணமுண்டான பின்பே மரண சாதனம் உறுதிப்படும். அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்குப் பெலனில்லையே.

அந்தப்படி, முதலாம் உடன்படிக்கையும் இரத்தமில்லாமல் பிரதிஷ்டை பண்ணப்படவில்லை. என்கிறார் எபிரேய நிருப ஆசிரியர் (எபி 9:15-17)

அவர் தொடர்ந்து அடுத்த அதிகாரத்தில் ''தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய இதோ வருகிறேன் என்று சொன்னார். இரண்டாவதை நிலை நிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப் போடுகிறார்.

இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே அந்த சித்தத்தின்படி நாம் பரிசுத்த மாக்கப்பட்டிருக்கிறோம் என்று எழுதுகிறார். எபி 10:9,10.

மேற்சொன்ன வசனங்களைப் படித்துப் புரிந்து கொண்ட பிறகு நாம் இன்னும் பழைய ஏற்பாட்டின் பிரமாணத்துக்குக் கட்டுப்பட வேண்டும் என்று சொல்வது எப்படி நியாயம்? தேவன் முதலில் ஒரு உடன்படிக்கை செய்தார். அந்த உடன்படிக்கையின் ஷரத்துக்கள் நிறைவேறி விட்டன. பின்னர் வெகு காலத்துக்குப் பிறகு மற்றொரு உடன்படிக்கையை ஏற்படுத்தி அதை இயேசு கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற மாசற்ற இரத்தத்தினாலே முத்திரித்தார். அந்தப் புதிய உடன்படிக்கை அமுலுக்கு வந்த பிறகு பழைய பிரமாணத்தின் ஷரத்துக்கள் செல்லுபடியாகாது என்பது வெள்ளிடைமலை.

ஆனால் சிலபேர் அப்படி ஒத்துக் கொள்ள விரும்பாமல் சடங்காச்சாரப் பிரமாணங்கள் தான் ஒழிக்கப்பட்டு விட்டன. மற்ற படி தேவனுடைய விரல் கொண்டு எழுதப்பட்ட பத்துக் கட்டளைகள் நிரந்தரமானவைகள். அவைகள் ஒழிக்கப்பட வில்லை. பத்துக் கட்டளைகள் ஒழித்துப் போடப்பட்டது என்று சொல்வோமானால் கொலை, கொள்ளை, களவு, விபச்சாரம் ஆகியவைகளை மாந்தர் தாராளமாய்ச் செய்யலாம் என்று அர்த்தமாகி விடாதா? என்று அங்கலாய்க்கின்றனர். அப்படிக் கலக்கமடையத் தேவையில்லை. ஓய்வு நாள் பிரமாணத்தைத்தவிர புதிய மற்ற அனைத்துப் பிரமாணங்களும் கிறிஸ்துவின் பிரமாணமாகிய புதிய ஏற்பாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. சொல்லப் போனால் இன்னும் ஆழமான பொருள் பொதிந்த பிரமாணங்களாக திருத்தி அமைக்கப்பட்டிருக்கின்றன. ஓய்வு நாள் பிரமாணமும் கால சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு மாற்றப்பட்டு வாரத்தின் முதலாம் நாளுக்கு அந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஏற்பாடு சில பேர் கூறுவது போல மனிதர்களுடைய சதித் திட்டம் அன்று. பரிசுத்த ஆவியானவர் பரிசுத்த மனிதர்களைக் கொண்டு எழுதப் பட்ட காலத்திலேயே மாற்றப்பட்டது (அப் 20:7: 1 கொரி 16:1,2 ஆகிய வசனங்களைக் காண்க).

இந்த முதலாம் உடன்படிக்கையாகிய பழைய பிரமாணம் யார் யாருக்கு ஏற்பட்ட உடன்படிக்கை என்பதை வேதாகமம் தெளிவு படுத்தாமலில்லை ''மோசே இஸ்ரவேலர் எல்லாரையும் அழைப்பித்து அவர்களை நோக்கி இஸ்ரவேலரே,, நான் இன்று உங்கள் காதுகள் கேட்கச் சொல்லும், கட்டளைகளையும், நியாயங்களையும் கேளுங்கள்; நீங்கள் அவைகளின் படியே செய்யும் படிக்கு அவைகளைக் கற்றுக் கொள்ளக் கடவீர்கள்.

நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஓரேபிலே நம்மோடே உடன்படிக்கை பண்ணினார். அந்த உடன்படிக்கையைக் கர்த்தர் நம்முடைய பிதாக்களுடன் பண்ணாமல் இந்நாளிலே இங்கே உயி-ரோடிருக்கிற நம்மெல்லோரோடும் பண்ணினார் (உபா 5:1-3) இவைகள் கொல்லுகிறது போதாது என்று நினைப்பவர்களுக்கு அப்-போஸ்தலன் பவுல் பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டை-யும் ஒப்பிட்டுச் செய்த விமர்சனத்தை ஞாபகப்படுத்த விரும்புகி-றோம். அதில் புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டை விட ஆழமும் அர்த்தமும் உள்ளது என்று சுட்டிக் காட்டுகிறார். ''புது உடன்-படிக்கையின் ஊழியக் காரராயிருக்கும்படி அவரே எங்களைத்தகுதி யுள்ளவராக்கினார். அந்த உடன்படிக்கை எழுத்துக்குரியதாயிராமல் ஆவிக்குரியதாயிருக்கிறது. எழுத்துக் கொல்லுகிறது ஆவியோ உயிர்ப்பிக்கிறது.

எழுத்துக்களினால் எழுதப்பட்டு கற்களால் பதிந்திருந்த மரணத்துக் கேதுவான ஊழியத்தைச் செய்த மோசேயினுடைய முகத்திலே மகிமைப் பிரகாசம் உண்டானபடியால் இஸ்ரவேல் புத்திரர் அவன் முகத்தை நோக்கிப் பார்க்க கூடாதிருந்தார்களே

ஒழிந்து போகிற மகிமையுடைய அந்த ஊழியம் அப்படிப் பட்ட மகிமையுள்ளதாயிருந்தால் ஆவிக்குரிய ஊழியம் எவ்வளவு அதிக மகிமையுள்ளதாயிருக்கும்?

ஆக்கினைத் தீர்ப்புக் கொடுக்கும் ஊழியம் மகிமையுள்ளதா-யிருந்தால் நீதியைக் கொடுக்கும் ஊழியம் அதிக மகிமையுள்ளதா-யிருக்குமே.

இப்படியாக மகிமைப்பட்டிருந்த அந்த ஊழியம் இந்த ஊழி யத்திற்கு உண்டாயிருக்கிற சிறந்த மகிமைக்கு முன்பாக மகிமைப்-பட்டதல்ல.

அன்றியும் ஒழிந்து போவதே மகிமையுள்ளதாயிருந்ததானால் நிலைத்திருப்பது அதிக மகிமையுள்ளதாயிருக்குமே.

நாங்கள் இப்படிப்பட்ட நம்பிக்கையை உடையவர்களா-தலால் மிகவும் தாராளமாய்ப் பேசுகிறோம்.

மேலும் ஒழிந்து போவதின் முடிவை இஸ்ரவேல் புத்திரர் நோக்கிப் பாராதபடிக்கு மோசே தன் முகத்தின் மேல் முக்காடு போட்டுக் கொண்டது போல நாங்கள் போடுவதில்லை.

அவர்களுடைய மனது கடினப்பட்டது. இந்நாள் வரைக்கும் பழைய ஏற்பாடு வாசிக்கப்படுகையில் அந்த முக்காடு நீங்காமலிருக் கிறது; அது கிறிஸ்துவினாலே நீக்கப்படுகிறது.

மோசேயின் ஆகமங்கள் வாசிக்கப்படும் போது, இந்நாள் வரைக்கும் முக்காடு அவர்கள் இருதயத்தின் மேல் இருக்கிறதே

அவர்கள் கர்த்தரிடத்தில் மனந் திரும்பும்போது அந்த முக்காடு எடுபட்டுப் போகும் *(2 கொரி 3:6-16)*

கிறிஸ்து பழைய பிரமாணத்தை நீக்கிப் போட்டு, புதிய பிரமாணத்தை ஏற்படுத்தி, தமது இரத்தத்தினாலே முத்திரித்து உலகில் உள்ள அனைத்து மாந்த குலத்துக்கும் எல்லாக் காலத்துக்கும் பொருந்தும் வகையில் அமைந்திருக்கிறதா என்பதை விளக்க ஏராளமான வசனங்களை ஆதாரமாகக் காட்டலாம். கடைசி காலத்தில் நியாயம் தீர்ப்பது அவர் அருளிய வசனங்கள் தான் என்பதைக் கிறிஸ்துவே சொல்லியிருக்கிறாரே (யோவான் 12:48) அதற்குப் பிறகும் ஏன் இந்த குழப்பம்!

**இசைக் கருவிகள் :** கிறிஸ்துவின் சபையாராகிய நாங்கள் இசைக் கருவிகளை ஆராதனையில் உபயோகிப்பதில்லை என்பதைக் கேட்டு சிலர் வியப்படைகிறார்கள். அது ஏன் என்று விளங்கவிலை. நாம் தேவனை ஆராதிக்கிறோம் அப்படியானால் தேவனுடைய கட்டளையின்படியும், அதித் திருச்சபையின் முன் உதாரணத்தின் படியும் தானே ஆராதிக்க வேண்டும்? அதை விடுத்து நமது மாமிசமும் மனதும் விரும்பின பிரகாரம் ஆராதிப்போம், நீர் ஏற்றுக் கொண்டு தான் ஆக வேண்டும் என்று நிர்ப்பந்திப்பது நியாயம் ஆகுமா? விக்கிரங்கள் அப்படி ஏற்றுக் கொள்ளும். நாம் ஜீவனுள்ள தேவனை ஆராதிக்கிறோம். அவர் எதை எதை எப்படி எப்படிச் செய்ய வேண்டும் என்று சட்டங்கள் வகுத்துக் கொடுத்திருக்கிறாரே

இன்றைக்குக் கிறிஸ்தவர்கள் கடைப் பிடிக்க வேண்டிய சட்டங்கள் யாவும் புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறது என்று பார்த்தோம். அப்படியானால் ஆராதிக்கும் முறை பற்றிப் புதிய ஏற்பாட்டு உபதேசம் எனன்? அல்லது எந்த விதமான முறைகள் ஆதித் திருச் சபையில் அனுஷ்டிக்கப்பட்டன என்று கவனிக்க வேண்டும். ''உங்கள் இருதயங்களில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி'' என்றும் (எபே 5:19) உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி'' என்றும் (கொலோ 3:16) சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் வேறே எங்காவது புதிய ஏற்பாட்டில் ஆராதனை பற்றிக் குறிப்புகள் இருக்கிறதா என்று தேடிப் பார்த்த பொழுது ''அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை . . '' என்று எபிரேய நிருப ஆசிரியர் குறிப்பிடுகிறார், (எபி 13:15) இவைகள் அனைத்திலும் இசைக் கருவிகள் உபயோகப்படுத்துவதை அங்கீகரிக்கும் தடயங்களையே காணோம்.

ஒன்றை உங்களுக்கு தெளிவுபடுத்தி விடுவது நல்லது. நாங்கள் இசைக்கருவிகளுக்கு விரோதிகள் அல்ல. இசைக்கருவிகள் மூலம் எழுப்பப்படும் இனிய நாதங்களை இரசித்து மகிழ்கிறோம். வீட்டிலோ மற்ற இடங்களிலோ இசைக் கருவிகள் வாசிக்கப்படுவதைப் பற்றி எங்களுக்கு ஆட்சேபம் ஒன்றுமில்லை. நம்முடைய வீடுகளில் இசைக் கருவிகளோடு வேறு எத்தனையோ பொருட்கள் கூட இருக்கலாம். அவைகளையெல்லாம் நாம் ஆராதனையில் பயன்படுத்த வேணடும் என்று நினைப்பதில்லையே. இசைக் கருவிகளுக்கு மட்டும் ஏன் விசேஷச் சலுகை?

என்ன ஐயா இப்படிச் சொல்லுகிறீர்கள்! தாவீது அரசனும் மற்றவர்களும் தேவனைத் தொழுது கொள்ளும் போது இசைக் கருவிகளைப் பயன்படுத்தியதை நீங்கள் ஒரு நாளும் வாசித்ததில்லையா? என்று ஆதாரம் காட்ட முயல்கிறார்கள். உண்மைதான்- அவாகள் ஆராதனையில் இசைக் கருவிகளை பயன்படுத்தினார்கள்; அவர்கள் எருசலேமில் உள்ள தேவாலயத்துக்குப் போய் ஆராதித்தார்கள். மிருக பலி செலுத்தினார்கள். விருத்த சேதனம் செய்து கொண்டார்கள். ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளை உடையவர்களாயிருந்தும் அது குற்றமாக எண்ணப் படவில்லை.

இன்றைக்கு இசைக் கருவிகளை சம்மந்தப்பட்ட காரியங்களில் அவர்களுடைய முன்னுதாரணங்களைச் சுட்டிக் காட்டுபவர்கள் மற்றவைகளைவயல்லாம் ஏன் தள்ளிப் போட்டார்கள்? நண்பர்களே, தேவனுக்கு பிரியமோ இல்லையோ நீங்கள் எவைகளை விரும்புகிறீர்களோ அவைகளை ஆராதனையிலும் புகுத்தி தேவ ஆலோசனைகளைத் துணிகரமாய் மீறித் தேவன் விரும்பாததைச் செய்வதற்கு தாவீது அரசனையும், பழைய ஏற்பாட்டுச் சம்பவங்களையும் மேற்கோள் காட்டுகிறீர்கள். வேண்டாம். புதிய ஏற்பாட்டில் தேவன் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிற காரியங்களைப் பின்பற்ற முயலுவோம்.

இசைக்கருவிகளின் துணையின்றியே ஆதிக் கிறிஸ்தவர்கள் பாடி தேவனைத் துதித்து மகிழ்ந்தார்கள். தேவன் அதை ஏற்றுக் கொண்டு சுகந்த வாசனையாக முகர்ந்தார். இன்றைக்கு நமக்குக் கொஞ்சம் கிலுகிலுப்புத் தேவை என்பதற்காக தேவனுடைய ஆலோசனையை மீற முயற்சிப்பது நல்லதா? நாம் வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது எதைச் செய்தாலும் தேவனுக்குப் பிரியமாயிருக்க வேண்டாமா? மார்க்க சம்பந்தமான காரியங்களில் சிக்கல்களும், பிரிவினைகளும் வருவது எதனால்? தேவனுடைய ஆலோசனையைப் பின்பற்றுவதினால் அல்ல; நம்மில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் விருப்பத்தை அதற்குள் நுழைப்

பதினால் தான் ஏற்படுகின்றன என உணர்ந்து, அவைகளைக் களைந்து விட்டு தேவனுடைய திட்டத்தை அப்படியே சீறாமல் கிழியாமல் பின்பற்ற தேவன் நமக்குக் கீழ்ப்படிதல் உள்ள ஆவியைத் தருவாராக !

## அற்புத அடையாளங்கள் :

இயேசு கிறிஸ்து இன்று உயிரோடிருக்கிறாரா? ஆம் சந்தேகமில்லாமல் அவர் உயிரோடிருக்கிறார். அது எப்படி நமக்குத் தெரியும்? அதை நிரூபிப்பதற்கு அவர் மீண்டும் உயிரோடு எழுந்து வந்து ஒவ்வொருவருக்கும் காட்சி தரவேண்டுமா? அப்படிச் செய்வது அவசியம் என்று நீங்கள் யாரும் சொல்லமாட்டீர்கள் என்று நம்புகிறேன். பின் ஏன் இயேசுகிறிஸ்து உயிரோடிருக்கிறார் என்பதை நிரூபிப்பதற்கு இன்றைக்கும் அற்புத அடையாளங்கள் நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்? கர்த்தர் ஏற்கனவே இந்த உலகத்துக்கு வந்து மானிடனாகப் பிறந்து, வாழ்ந்து, வேதவாக்கியங்களின்படி மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, வேத வாக்கியங்களின்படி உயிர்த்தெழுந்தார் என்றும் (லூக் 19:10 ; 1 1கொரி 1 :3-4) அற்புத அடையாளங்கள் பல செய்து தான் தேவனுடையகுமாரன் என்பதை பலமாய் நீரூபித்து உறுதி செய்து விட்டார் என்றும எழுதியிருக்கிறது போதாதா?'' ''இந்த புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார்.

இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கிறது'' என்கிறாரே யோவான் (யோவான் 20:30,31) அப்போஸ்தலனாகிய பவுல் கூட'' விசுவாசம் கேள்வியினாலே வரும், 'கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்'' என்கிறார் (ரோமர் 10:17) மேலும் வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது அவைகள் ஒருவனை எல்லா நற்கிரியைகளையும் செய்யத் தகுதியுள்ளவனாக்குகிறது என்கிறார் பவுல் (2 தீமோ3:16-17) அப்போஸ்தலனாகிய பேதுரு இதை ஆமோதிக்கும் வகையில் "ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்திருக்கிறது என்கிறார் (2 பேதுரு 1:3) அதனால் தான் யாக்கோபும் ''நீங்கள் திருவசனத்தைக் கேட்கிறவர்களாக மாத்திரம் இல்லாமல் அதன்படி செய்கிற வர்களாயும் இருங்கள்" என்று அறிவுரை வழங்குகிறார் (யாக் 1:22) ''ஜீவ விருட்சத்தின் மேல் அதிகாரமுள்ளவர்கள் ஆவதற்கும் வாசல்கள் வழியாய் நகரத்துக்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய

கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்'' என்று யோவான் கூறுகிறார். (வெளி 22:14)

மேற்சொன்ன யாவும் உண்மையானுல் நாம் ஏன் இன்னும் அற்புதங்களைக் காணவும், அவைகளை. அனுபவிக்கவும் ஏங்கித் தவிக்கிறோம்? மற்றவர்கள் சொல்லுவதைக் கேட்டுக் கொண்டு தலையாட்டிக் கொண்டிராமல் அவ்வப்பொழுது வேத புத்தகங்களையும் திறந்து வாசித்துப் புரிந்து கொள்ளப்பிரயாசப்படுங்கள். இயேசு கிறிஸ்து தேற்றாவாளனை அனுப்புவேன் என்று யாரிடம் கூறினார்?—தம்முடைய அப்போஸ்தலர்களிடம்(யோவான் 14:26; 16:13) ''நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிபிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்று சொன்னார் யாரிடம்?— தமது அப்போஸ்தலர்களிடம்(லூக் 24:49) ''பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலன் அடைந்து எருசலேமிலும் யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்று யாரிடம் சொன்னார்? அப்போஸ்தலர்களிடம் (அப் 1;8).

அதன்படி அவர்கள் நடந்து கொண்டார்கள்; பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டார்கள் அதற்கு அடையாளமாக அந்நிய பாஷையில் பேசினார்கள் (அப் 2:1-4) அற்புத அடையாளங்களைச் செய்தார்கள் (அப் 2:43).

மேற்சொன்ன வசனங்கள் சுட்டுவது அப்போஸ்தலரை மட்டுமே. அதைப்புரிந்து கொள்ளாமல் நானும் நீங்களும் அவைகளுக்கு உரிமை கொண்டாடுவது எவ்விதத்தில் நியாயம்? அவர்கள் தவிர குறிப்பிட்ட சிலர் மீது அப்போஸ்தலர்கள் கை வைத்து அற்புத அடையாளங்கள் செய்யும் வரத்தைக் கொடுத்தார்கள் (அப் 6:5) அவ்விதமாய் அப்போஸ்தலர்களிடமிருந்து அற்புத அடையாளங்கள் செய்யும் வரத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் அவர்களோடு சரி, அந்த வரத்தை அவர்கள் மற்றவர்வர்களுக்கு அவைகளை விநியோகிக்கும் உரிமையற்றவர்களாக இருந்தார்கள்.

இன்றைச்கு வாழுகிற நாம் அப்போஸ்தலர்களாக இராதபடியினால் அப்போஸ்தலர்கள் நம்மீது கைகளை வைத்து அந்த வரத்தை நமக்குக்கொடுக்க வில்லை யாதலாலும் நமக்கு அற்புத அடையாளங்கள் செய்யும் வரமில்லை. நமக்கு மட்டும் அல்ல. மற்ற எவர்க்கும் இருக்க வாய்ப்பில்லை.

நாம் இப்படிச் செல்லும்போது தேவனுடைய வல்லமையைக் குறைத்து மதிப்பிடவில்லை. அவருக்கு அற்புதம் செய்ய இந்த நூற்றாண்டில் திராணியில்லை, என்று கூறுகிறோம் என்று நினைத்து

விடாதீர்கள். அப்படியில்லை. தேவன் வானங்களையும் பூமியையும் படைத்தார். அவர் மண்ணிலிருந்து மனிதனை உண்டாக்கினார். இன்றைக்கும் தான் கடவுள் என்று நிரூபிப்பதற்கு ஷீ படைப்புப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறாரா? இல்லையே! இயற்கைச்சட்டத்துக்கு ஒப்புக் கொடுத்து விட்டார் என்பதைக் கவனியுங்கள்.

நமக்கு ஏதாவது புதுமையைப் பார்த்துக் கொண்டும், கேட்டுக் கொண்டும் இருக்க வேண்டும் என்ற ஒரு விதமான அரிப்பின் காரணமாகத் தான் இவைகளையெல்லாம் செய்ய வேண்டும் என்று துடிக்கிறோம். இன்றைக்கு எங்களுக்கும் அற்புதம் செய்யும் வல்லமை உண்டு என்று சொல்லுபவர்கள் பொய்யர்கள்; ஏமாற்றுக்காரர்கள். இவர்கள் எவ்விதமான அற்புதங்களையும் செய்வதில்லை. செய்யவும் முடியாது. சாத்தானுடைய செயலின்படி நடைபெறும் பொய்யான அற்புதங்களைத் தான் இவர்களால் செய்ய முடியும். (2 தெச 2:9) அதுவும் நம்முடைய கண்களால் பார்க்க முடியாத வயிற்றுவலி, முதுகுவலி என்று சொல்லக்கூடிய வகையைச்சேர்ந்ததாகத் தான் இருக்கும்.

இப்படிப்பட்ட பேர்வழிகளைப்பற்றி கிறிஸ்து சொன்னது என்ன? ''கள்ளக் கிறிஸ்துக்களும், கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்க பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள் இதோ முன்னதாக உங்களுக்கு அறிவிக்கிறேன்'' என்று எச்சரிக்கிறார் (மத் 24:24)

எனக்குப் பிரியமான கர்த்தருடைய பிள்ளைகளே! தயவுசெய்து தேவனுடைய வார்த்தைகளை நம்புங்கள். அவருடைய ஒவ்வொரு வார்த்தையையும் ஏற்கனவே பலமாய் நிரூபிக்கப்பட்டு விட்டன. அவைகள் மீண்டும் மீண்டும் உறுதி செய்யப்பட வேண்டிய அவசியமில்லை. அப்படியே உறுதி செய்யப்பட வேண்டிய அவசியம் நேர்ந்தாலும் நிச்சயமாக இந்த பொய்யர்களையும் வஞ்சகர்களையும் தேவன் பயன்படுத்தவே மாட்டார். நீங்கள் அடிக்கடி தேவனுனடய வசனத்தை வாசித்து தியானியுங்கள். தேவனுடைய வசனங்களுக்கு முரணான காரியங்களைப் போதிக்கிற கள்ளப் போதகர்களைப் அடையாளங் கண்டு கொண்டு ஒதுக்குங்கள் (2யோவான் 9-11) தேவனுடைய சித்தம் இன்னதென்று அறிந்து கொள்வதற்கு குறுக்கு வழி கிடையாது. தேவனுடைய வசனங்களைக் கருத்தாய் வாசித்துத் தியானிப்பதும், அதை உறுதியாக கடைப்பிடிப்பதும் ஒன்றே வழி. அப்பொழுது நீங்கள் மெய்யாகவே இரட்சிக்கப்படுவீர்கள். ஏற்கனவே நீங்கள் வேத வசனத்தின்படி இரட்சிக்கப்பட்டிருந்தால் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள் பிலி 2:12,

**J C. சோட்**

# ஒரு நல்ல மனைவியாக இருப்பது எப்படி?

பருவப் பெண்கள் திருமண நாளை ஆவலோடும் உற்சாகத்தோடும் எதிர்ப்பார்த்துப் பல இன்பக் கனவுகள் கண்டு கொண்டு இருப்பார்கள். மண நாள் என்னும் அந்த திருநாளைச் சந்திப்பதற்கான நீண்டதொரு திட்டத்தைத் தானாகவோ, சிநேகிதிகள் மற்றும் பெற்றோர்களுடன் சேர்ந்தோ தீட்டி ஒத்திகை பார்த்துக் கொண்டிருப்பார்கள் சிலர் சிறுகச் சிறுக பணம் சேர்த்துத் தனிக்குடித்தனம் நடத்த தேவையான தட்டு முட்டுச் சாமான்கள், பொருட்கள் ஆகியவைகளை ஒவ்வொன்றாய் வாங்கி பத்திரப் படுத்தி அந்தத் திருமண நாள் என்று-வருமோ என்று காத்துக் கொண்டிருப்பார்கள் பெற்றோர்களும், பெண்ணுக்குத்தேவையான பட்டுப் புடவைகள், துணிமணிகள், ஆபரணங்கள் ஆகியவகைளை யெல்லாம் சேகரம் பண்ணி தயார் நிலையில் இருப்பார்கள். இப்படி சகல ஏற்பாடுகளும் திருமண நாள் என்ற அந்த பொன்னுன நாளை மனதில் கொண்டு செய்யப்படும்.

அதெல்லாம் சரி, அந்த திருமண நாள் என்ற ஒரு நாள் கூத்து, நடந்து முடிந்த பின் என்ன? மணப்பெண் மனைவியின் அந்தஸ்து பெறுகிறாள். மனைவி யென்பதின் உண்மையான பொருள் என்ன? அது ஒரு காதல் திருமணமாக இருந்தால் ஏற்கனவே ஒருவருக் கொருவர் கொண்டிருந்த அன்பு பெருகி ஆழமாகி ஒருவரை யொருவர் இன்னும் நெருக்கமாய் புரிந்து கொள்வதற்கு வாய்ப்பு உண்டாகும். அப்பொழுது முன்பு கண்ணுக்குத் தெரியாமல் இருந்த பல தவறுகளும் பலவீனங்களும் தென்பட ஆரம்பிக்கும்.

பெற்றோர்களாக பார்த்து செய்து வைக்கும் திருமணங்கள் நமது நாட்டில் இன்னும் நடைமுறையில் உள்ளது. அப்படிப்பட்ட திருமணங்களால் புதிய பல சூழ்நிலைகள் உருவாகும். முற்றிலும் புதிய மனிதர்களடங்கிய குடும்பம் முன் பின் பழக்கமில்லாத கணவன் இப்படி பல சூழ்நிலைகளைச் சந்திக்கவும். சமாளிக்கவும் வேண்டியிருக்கும். அந்த திருமணம் மணப் பெண்ணுடைய சம்மதத்தின் பேரில் நடந்திருந்தால் புதிய சூழ் நிலைக்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக் கொண்டு தம்பதிகள் இருவரும் தங்கள் உறவை சரிசெய்து கொண்டு குடும்பத்தைக் கட்ட முயல வேண்டும்.

எப்படிப்பட்ட சூழ்நிலையில் மனைவிகளாக்கப்பட்டிருந்தாலும் சரி, அவர்கள் வெற்றி வாழ்க்கை வாழ்வதற்கு தேவை-

யான தேவ ஆலோசனைகள் வேதாகமத்தில் உண்டு. அவைகளைப் பின்பற்றி நடந்தால் வெற்றி நிச்சயம்.

(தீத்து 2:4,5)

1. தேவ வசனம் தூஷிக்கப்படாதபடிக்கு பாலிய ஸ்திரிகள் தங்கள் புருஷரிடத்திலும் தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களாக இருக்க வேண்டும்.
2. தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.
2. அன்புள்ளவர்களாக இருக்க வேண்டும்.
4. வீட்டில் தரித்திருக்கிறவர்களாக இருக்க வேண்டும்.
5. நல்லவர்களாக இருக்க வேண்டும்.
6. தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களாயிருக்க வேண்டும்.

அதுபோக எபேசியருக்கு எழுதின நிருபத்திலும் கூட மனைவி மார்களுக்கு அறிவுரைகள் கூறப்பட்டுள்ளன. ''மனைவிகளே கர்த்தருக்குக் கீழ்படிகிறது போல உங்கள் சொந்தப்புருஷர்களுக்கு கீழ்ப்படியுங்கள்'' ஒரு மனைவி தன் கணவனுக்கு உண்மையாகக் கீழ்ப்படிந்தால் அல்லது கீழ்ப்படிய ஆரம்பித்தால் மேலே கூறப்பட்டுள்ள மனைவிக்குரிய எல்லா நல்லியல்புகளும் தானாகவே வளர்ந்து பெருகும். அப்படிப்பட்ட மனைவியை கணவனும் நேசிக்க ஆரம்பிப்பான். அப்பொழுது தன் மனைவியுடன் இசைந்து இருவரும் ஒரே மாமிசமாக இருப்பார்கள் என்ற தேவ திட்டம் செம்மையாக நிறைவேறும்.

வேதாகமம் இங்கே அன்பு என்று குறிப்பிடுவது ஏதோ பால் கவர்ச்சியால் உந்தப்படும் ஒரு வித கிலு கிலுப்பு அல்ல; நம்மை நேசிக்கிறவர்களுக்கு நாம் என்ன செய்ய முடியும் என்று எண்ணிப் பார்த்துச் செயலாற்றக் கூடிய ஒரு உயர் நெறி. ஒரு மனைவி இப்படிப்பட்ட அன்புள்ளவளாய் இருப்பாளானால் கணவருடைய மனதைப் புரிந்து கொண்டு அவனுக்கு பிரியமாக நடந்துக்கொள்வாள். அவனுடைய உடமைகளைப் பாதுகாப்பாள். அவருக்குப் பிரியமானவர்களை கண்ணியமாக நடத்துவாள். வீட்டுக் காரியங்களைப் பாங்காய்ச் செய்து அவனை மகிழ்விப்பாள். அவன் செய்கிற வேலைகள், அவனுடைய நண்பர்கள் அவனுடைய விருப்பு வெறுப்புகள் அவனுடைய சிந்தனையோட்டங்கள் ஆகிய அனைத்தையும் தெரிந்து வைத்துக்கொண்டு அவனுடைய மகிழ்ச்சியிலும், துக்கத்திலும் பங்கு கொள்வாள்.

கணவனுக்கு கீழ்ப்படிந்து, நேசித்து கனப்படுத்துவது மனைவியின் பொறுப்பும் கடமையுமாயிருக்கிறது. அவள் ''தன்னுடைய சுய சரீரத்துக்கு அதிகாரி அல்ல, புருஷனே அதற்கு அதிகாரி'' அதற்கென்று புருஷன் எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ளலாம் என்று பொருளில்லை இதே விதி கணவனுக்கும் பொருந்தும் (1 கொரி 7:3-5) ஒரு மனைவி தன்னுடைய நலனைவிடத் தன் பெற்றோர்களின் நலனை விட கணவனுடைய நலனை அதிகமாகப் பேணி நடந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு தன் கடமையை நன்கு புரிந்து கொண்டு செயல்படும் போது கணவனுடைய இதயம் மகிழ்ந்து குடும்பத்தில் சந்தோஷமும் சமாதானமும் பெருகும். கர்த்தர் அப்படிப்பட்ட குடும்பத்தை ஆசீர்வதிப்பார்.

**பெட்டி பர்ட்டன் சோட்**

நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் என்றும் தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறார்ரென்றும் அறியாதிருக்கிறீர்களா?

ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அவனை தேவன் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம்.

1 கொரி 3:16-17

# 1 கொரிந்தியர் 13:8-13 கூறுவது என்ன?

இந்த அதிகாரம் முழுவதும் தெய்வீக அன்பைக் குறித்தே பேசுகின்றது. அன்பே எல்லாவற்றிலும் தலை சிறந்தது. அன்பிற்கு இணையானது பூலோகிலும் பரலோகிலும் வேறொன்றும் இல்லை.

இந்த அதிகாரம் அதற்கு முந்தின (பன்னிரெண்டாம்) அதிகாரத்தையும் பிந்தின (பதினாலாம்) அதிகாரத்தையும் இணைக்கும் சங்கிலித் தொடராக இருக்கின்றது. இவ்விரு அதிகாரங்களும் ஆவியின் வரங்களை அதிலும் முக்கியமாக அந்நிய பாஷைகளைப் பற்றியே பேசுகின்றன. 13ஆம் அதிகாரத்தின் நடுவில் **''அந்நிய பாஷைகள் ஓய்ந்துபோம்''** (வச,8) என்பதை காண்கிறோம். வேறு இரண்டு வரங்களும்கூட நின்று போகும் அல்லது முடிவடைந்துவிடும் என்று வாசிக்கிறோம். இந்த மூன்று வரங்களும் 12ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட பல வரங்களுள் அடங்கி இருக்கின்றன.

14ஆம் அதிகாரத்தில் பாஷைகளைப் பேசுவதைப் பற்றிய விதிமுறைகள் கூறப்பட்டுள்ளன. ஆனால் இவற்றையெல்லாம் 13:8 வசனத்தோடே ஒப்பிட்டே புரிந்து கொள்ள வேண்டும் அந்நிய பாஷைகள் ஒய்ந்து போகும் வரையுள்ள இடைக்காலத்திலே அவை பேசப் படவேண்டிய ஒழுங்கு முறையை விளக்குவதுதான் 14ஆம் அதிகாரத்தின் பணி : 14ஆம் அதிகாரம் தற்காலிகமாக அமுலிலிருந்த சட்டமாகும்.

13ஆம் அதிகாரத்தில் தொடக்க முதல் முடிவு வரை எதிர்மறையான காரியங்கள் அல்லது ஒன்றுக்கொன்று வித்தியாசமுள்ள காரியங்கள் தொகுத்துக் கூறப்படுகின்றன. 8ஆம் வாக்கியமும் 13 ஆம் வாக்கியமும் குறிப்பாகக் கவனிக்கத்தக்கவை. 8ஆம் வாக்கியத்தில் **தீர்க்கதரிசனங்கள், அந்நிய பாஷைகள், அற்புதமான அறிவு** ஆகியவை மறைந்து ஒழிந்து போகும் எனவும், 13ஆம் வாக்கியத்தில் **விசுவாசம், நம்பிக்கை, அன்பு** ஆகிய மூன்றும் இந்த யுகம் முழுவதும் நீடித்திருக்கும் எனவும்கூறப்பட்டுள்ளன.

இவ்வதிகாரத்தில் முதல் ஏழு வாக்கியங்களில் வரங்களும், அன்பும் ஒப்பிடப்பட்டுள்ளன. இவற்றுள் அன்பே சிறந்தது என்று காண்கின்றோம். இரண்டாவது பகுதியில், 8—12. வசனங்கள் வரை வரங்களும் தேவனுடைய பூரணமான வெளிப்படுதலும் ஒப்பிடப்பட்டுள்ளன.

இரண்டாவது பகுதியைப் பின்வருமாறு பகுத்தாராயலாம்.

(அ) குறைவானது என்றும் நிறைவானது என்றும் பார்க்கிறோம். நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம் - அது எப்பொழுது?

(ஆ) குழந்தைக்குரிய காரியங்கள், புருஷனுக்குரிய காரியங்கள் — அது எப்படி?

(இ) கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம் — அது ஏன்?

(ஈ) குறைந்த அறிவு' அரியப்பட்டிருக்கிறபடியே அறிந்து கொள்வது — அது என்ன?

முதல் கேள்விக்கு விடை ''நிறைவானது வரும்பொழுது'' என்ற பதிலையே பெறுகின்றோம். ஏனென்றால் இப்பொழுது நம்முடைய அறிவு குறைவுள்ளது. நாம் தீர்க்கத்தரிசனம் சொல்லுகிறதும் குறைவுள்ளது; ஆதலால் நிறைவானது வரும்பொழுது குறைவானது ஒழிந்துபோம் என்று பவுல் அப்போஸ்தலன் கூறுகின்றார். ஆதிச்சபைக்குப் புதிய ஏற்பாட்டு வேதாகமப் பகுதிகள் முழுவதுமாகக் கொடுக்கப்படுவதற்கு முன்பும், ஆதிச்சபையின் வளர்ச்சிக்காகவும், அதன் சாட்சிக்காகவும் இந்த வரங்களையெல்லாம் தேவன் நிரம்பக் கொடுத்திருந்தார். இந்த வரங்களின் மூலமாகச் சபைக்குத் தேவையான சத்தியங்களையெல்லாம் தேவன் போதித்து வந்தார். ஆனால் இப்பொழுது நமது கையிலிருக்கும் புதிய ஏற்பாடு தேவனுடைய பூரணமாக வெளிப்படுத்தலாகும். இந்த வெளிப்பாட்டிற்கு மிஞ்சிக் கூட்டியோ, குறைத்தோ யாரும் போதித்தால் அது தேவனோடு போரிடுவதாகும். இந்த யுகம் முழுவதும் சபைக்குத் தேவையான எல்லாச் சத்தியங்களும், போதகமும் தீர்க்கத்தரிசனங்களும், புதிய ஏற்பாட்டிலுள்ள 27 புத்தகங்களிலும் அடங்கியிருக்கின்றன. ஆனால் இவ்வாறு நிறைவான வேதாகமம் முழுவதும் சபைக்கு கிடைப்பதற்கு முன்பாக, தேவன் இந்த வரங்களின் மூலமாகவே தமது ஆலோசனைகளையெல்லாம் அப்போஸ்தலர் காலத்திலுள்ள சபைக்கு வெளிப்படுத்தி வந்தார். ஆயினும் அவை குறைவானவைதான். அல்லது ஒரு பகுதியைத்தான் வெளிப்படுத்தின என்று கூறலாம். ஆனால் நிறைவான புதிய ஏற்பாடு கிடைத்தபின் குறைவானதற்குத் தேவையற்று போய்விட்டது.

கொரிந்தியருக்கு இந்த நிருபத்தை பவுல் எழுதுகின்ற வேளையிலே' தெசலோனிக்கேயருக்கு எழுதப்பட்ட இரு நிருபங்கள்தான் இருந்தன. புதிய ஏற்பாட்டுப் புத்தகம் வேறெதுவும்

எழுதப்படவில்லை. ஆதிச்சபையின் வெளிப்பாடு மிகக் குறைவுள்ளதாக இருந்ததால், கர்த்தர் பல அற்புதமான வரங்களின் மூலம் இதை நிறைவாக்கினார். இவற்றின் மூலம் புதிய ஏற்பாட்டுச் சத்தியங்கள் பல தொடக்கக் காலத்துச் சபைக்கு அறிவிக்கப்பட்டன. ஆனால் பூர்ணமானது அல்லது நிறைவானது (முழுப் புதிய ஏற்பாடும்) வந்துவிட்ட பிறகு குறைவானது (அந்நிய பாஷைகள் தீர்க்கதரிசனங்கள், அற்புத அறிவு) செயலற்று ஒழிந்து விட்டன

## நிறைவானது

''நிறைவானது வரும்பொழுது குறைவானது ஒழிந்துபோம்'' (1 கொரி. 13:10) இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ள ''நிறைவானது'' என்ன?

''நிறைவானது'' என்று அஃறிணையில் கூறப்பட்டிருப்பதால் இப்பதம் பிதாவையோ. கிறிஸ்துவையோ அல்லது வேறெந்த ஆளையுமோ குறிக்காது.

மேலும் இப்பதம் இனிமேல், காலஞ்சென்று, நடைபெறப்போகும் காரியத்தையும் குறிப்பிடவில்லை. இதன் உண்மையான பொருள் என்னவெனில், ''நிறைவானது (தேவனிடத்திலிருந்து நம்மிடம்) வரும்போது'' என்பதுதான் ''நாம் நிறைவானதின் இடத்திற்குச் செல்லும்பொழுது என்று இனிவரும் காலத்தைக் குறிக்கவில்லை! அதாவது பவுல் இதை எழுதின சில ஆண்டுகளுக்குள்ளாகவே ''நிறைவானது'' வந்துவிடும் என்று எதிர்பார்த்தார். இவ்விதம் பூரணமானது தேவனிடத்திலிருந்து வரும் பொழுது ''குறைவானது (வரங்கள்) மறைந்துவிடும். முழு வேதாகமத்திலிருந்து நாம் பெறக்கூடிய வெளிப்படுதலோடு, வரங்களின் மூலம் மாத்திரம் பெறக்கூடிய வெளிப்படுதலோடு, வரங்களின் மாத்திரம் பெறக்கூடிய வெளிப்படுதலை ஒப்பிடும்பொழுது, இது குறைவுள்ளது, நிறைவில்லாதது என்று அர்த்தம். இப்பொழுது. நமக்கு (சபைக்குத் தேவையான சத்தியத்தையும், தீர்க்க தரிசனத்தையும் இரகசியங்களையும், மறை பொருள்களையும் வேதாகமத்திலிருந்தே பூரணமாக அறிந்து கொள்ளுகிறோம். வரங்களின் மூலமாக நாம் ஆவிக்குரிய சத்தியங்களை அறிந்து கொள்ளுவதில்லை. - அறிந்து கொள்ள முயல்வதுமில்லை - அப்படிச் செய்யவுங்கூடாது. தேவனுடைய வார்த்தையாகிய பரிசுத்த வேதாகமத்திலுள்ள சத்தியத்தைத் தவிர வேறு எதுவும் சபைக்குத் தேவையில்லை. நமக்குத்தேவையான யாவும் வேதாகமத்திலேயே அடங்கியிருக்கிறது. வேதாகமத்தைத் தவிர வேறு வழியாக அறியக்கூடுமானால், அது தேவனிடத்திலிருந்து வந்ததா அல்லது சாத்தானிடத்திலிருந்து வந்ததா என்று எவ்வாறு அறியமுடியும்? ஆதலால், ''நிறைவானது'' வேதாகமத்தையே குறிக்கும்.

மேலும் வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டிருப்பது தவிர, நேரடி வெளிப்படுதலும் சரிதான், தேவைதான் என்று எவராவது கூறுவாரானால் அல்லது ஏதாவது நூதன காரியத்தைத் தனக்கு மட்டும் பிரத்தியேகமாகத் தேவன் வெளிப்படுத்தினார் என்றும் கூறினால், அது கொடிய பாவமாகும். எனவே புதிய ஏற்பாடு எழுதி முடித்தபின், நிறைவானது வந்துவிட்டதால், வரங்களின் மூலமாகச் சத்தியத்தை அறிவிக்கும் முறையும் தேவையற்றதாகி கைவிடப்பட்டது. ''நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை அல்லாமல் நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவன்'' (கலா. 1:8)

''அறிவானாலும் ஒழிந்துபோம்'' என்ற வாக்கியத்தில், ''அறிவு'' என்ற பதம் பொதுவான அறிவையோ, அனுபவ அறிவையோ, பகுத்தறிவையோ அல்லது ஞாபக சக்தியையோ குறிக்காது. ஏனென்றால், இந்த அறிவு எப்பொழுது ஒழிந்துபோகும்? அது ஒருக்காலும் ஒழியாது ஏனென்றால் ஏற்கனவே நாம் பெற்றிருக்கிற அறிவை நித்தியத்திற்குள்ளும் கொண்டு செல்வோம். நாம் இங்கு கற்பவைகளை இனி ஒருக்காலும் மறக்கப்போவது இல்லை. நமது பாவ நிலையையும், கர்த்தரின் பாடு, மரணம், உயிர்தெழுதலையும் பற்றிய அறிவை இனி எப்பொழுதாவது மறப்போமா? எனவே இது சத்தியத்தை அறிகிற அறிவைக் குறிக்காது அதற்கு முடிவே இல்லை. நித்திய காலமும் தேவனின் நீதி, பரிசுத்தம், அன்பு, இரக்கம் ஆகியவற்றையும் அவருடைய சர்வ வல்லமை ஞானம் ஆகியவற்றையும் அறிந்து கொண்டும், ஆராய்ந்து கொண்டும் இருப்போம். இப்பொழுது பெற்றிருக்கிற இந்த அறிவில் மேன் மேலும் தேர்ச்சி பெற்றுக்கொண்டுதான் போவோமேயன்றி இதை இழப்பதில்லை.

அப்படியானால், எந்த ''அறிவு ஒழிந்துபோம்''? புதிய ஏற்பாடு முழுவதும் கிடைப்பதற்கு முன், தேவன் சபையில் சிலருக்கு அளித்திருந்த ''அற்புதமான அறிவு'' ஒழிந்துவிடும். அதாவது பரிசுத்த ஆவியானவர் ஆவிக்குரிய சத்தியங்களை நேரடியாக வெளிப்படுத்தும் முறை முடிந்துவிடும் அது எப்பொழுது? நிறைவானது வரும்பொழுது. எனவே புதிய ஏற்பாடு முற்றுப் பெற்றவுடன், அற்புதமான அறிவும் ஒழிந்து விட்டது.

அவ்விதமாக, தீர்க்கத்தரிசனமும் பொதுவான கருத்தில் ஒழிந்துவிடாது. வேதாகமத்திலுள்ள தீர்க்கதரிசனங்கள் எல்லாம் நிறைவேறியே தீரும் கர்த்தரின் இரண்டாம் வருகைக்கு பிறகும் நடைபெறுமென்று சொல்லப்பட்டுள்ள நிகழ்ச்சிகள், தீர்க்கத்தரிசனங்களின்படியே நடைபெறும் வேதகாமத்தில் கூறப்பட்டுள்ள எந்தத் தீர்க்கதரினமும் நிறைவேறாமல் ஒழிந்து போவதில்லை.

எனவே ''தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம்'' என்று பவுல் கூறும்பொழுது, எந்தத் தீர்க்கதரிசனங்களைத் குறிப்பிடுகிறார்? அவை தற்காலிகமாக, அப்போஸ்தலர் காலத்திலே. நிலவிய தீர்க்க தரிசன வரத்தை மட்டுமே குறிக்கும் என்று அறிகிறோம்! ஆகையால் **தீர்க்க தரிசனங்கள், அந்நிய பாஷைகள். அறிவு** ஆகிய மூன்றும் இடைச்காலத்துத் தற்காலிக வரங்கள், அவைகள் ஏற்கனவே ஒழிந்து போய்விட்டன. ஏனென்றால் அவை குறைவானவைதாம். இப்பொழுதோ நிறைவானது வந்துவிட்டது. அது முழு வேதகாமம்தான்.

**''அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கத்தரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஒய்ந்து போம், அறிவானாலும் ஒழிந்துபோம்''** (1கொரி 13 ; 08)

## குழந்தைப் பருவமும் தேறிய நிலையும்

இந்த அற்புத வரங்கள் எவ்வகையில் ஒழிந்துப்போம் ''நான் குழந்தையாயிருந்தபோது குழந்தையைப் போலப் பேசினேன். குழந்தையைப் போல சிந்தித்தேன். குழந்தையைப் போல யோசித்தேன். நான் புருஷனானபோதோ, குழந்தைக்கேற்றவைகளை ஒழித்துவிட்டேன். (1 கொரி. 13:11)

**தீர்க்கத் தரிசனங்கள், அந்நிய பாஷைகள் அற்புதமாக** அறிதல் ஆகியவைஇவ்வசனத்திலுள்ள ''குழந்தைக் கேற்றவைகள்'' ஆகும். கிறிஸ்துவின் சபை குழந்தைப் பருவத்திலிருந்தபோது. அதாவது தொடக்கக் காலத்தில், இந்த வரங்கள் அருளப்பட்டன. அது தேவனுடைய உத்தமமான கிருபையின் வழியாக இருந்தது. ஆனால் தேவன் வேதாகமத்தை எழுதித்தந்த பிறகு சபை குழந்தைப் பருவத்தை விட்டு, வளர்ச்சிப் பெற்று, புருஷப் பருவத்தை அடைந்துவிட்டதால், குழந்தைக் கேற்றவைகளை மறந்துவிட்டு, வயது வந்தவருக்கேற்ற முறையில்நடந்தது

''புருஷனாகும் வரை'' இதே கருத்தைக் மேலும் பவுல் அப்போஸ்தலன் எபேசியர் 4: 11-14ல் அதிகமாக விளங்குகின்றார். ''கிறிஸ்துவினுடைய வளர்ச்சியின் அளவுக்குத் தக்க பூரண புருஷராகும் வரைக்கும் சிலரை அப்போஸ்தலராகவும், தீர்க்கத்தரிசிகளாகவும், சுவிசேஷகராகவும், மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார் இவ்விதமாக சபையின் ஊழியக்காரர். விசுவாசிகளைத் தேர்ச்சியடையச் செய்யவும், பூரண வளர்ச்சி பெற்ற புருஷராக்கவும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர் என்று அறிகிறோம். இதே கருத்தை கொலோசேயர் 1 : 28 லும் தெரிவிக்கின்றார்,

''எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்தி சொல்லி, எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்.

இந்த வாக்கியங்களெல்லாம் குழந்தைப் பருவமென்பது சபையின் அரைகுறை வெளிப்படுதல் (வரங்கள்) என்றும், தேறின நிலை அல்லது புருஷப் பருவம், நிறைவான வெளிப்படுதல் (புதிய ஏற்பாடு) என்றும் நமக்கு விளக்கிக் காண்பிக்கின்றன. எனவே, குழந்தைக் கேற்றவைகள் முன்பே ஒழிந்து போய்விட்டன.

## 3. கண்ணாடியிலே நிழலாட்டமாய் காண்பதும் முகமுகமாய்க் காண்பதும்

அற்புதமான வரங்கள் ஒழிந்துபோக காரணங்கள் என்ன? ஏனென்றால், இந்த மூன்று வரங்களும் தேவனுடைய மகிமையையும் சத்தியத்தையும் குறைவான அளவில் கண்ணாடியிலே நிழலாட்டமாய் மட்டுமே காண்பிக்கின்றன. அல்லது இவை விடுகதைகளைப் போன்று இருக்கின்றன. ஆனால் புதிய ஏற்பாடு முழுவதும் எழுதப்பட்ட பிறகு, தேவனைப் பற்றியே நிறைவான வெளிப்படுதல் மனிதருக்குக் கொடுக்கப்பட்டிருப்பதால் முகமுகமாய்க் காண்கிறோம்.

எழுதப்பட்டுள்ள தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்தின் பெரிய அற்புதம் இதுதான் அதாவது தெய்வீக சத்தியத்தைக் கண்ணாடியில் கண்டதுபோன்றோ அல்லது விடுகதையை விடுவிப்பது போன்றோ அறிந்து கொள்ளாமல், முகமுகமாய் முழுவதுமாய், இருக்கிறபடியே அறிந்து கொள்ளுகிறோம்.

நாம் இதுகாறும் சிந்தித்தவைகளின் தொகுப்பாகப் பின்வருபவற்றைக் கூறலாம்.

பவுல் அப்போஸ்தலன் கொரிந்தியருக்கு முதல் நிருபத்தை எழுதுகின்ற வேளையில் :

1. தீர்க்கதரிசனங்களின் வரம் இருந்தது.
2. அந்நிய பாஷைகளில் வரம் இருந்தது.
3. அறிவின் வரம் இருந்தது.
4. வெளிப்படுதல் ''குறையுள்ளதாக'' இருந்தது.
5. குழந்தைக்குரியவைகள் பழக்கத்திலிருந்தன.
6. கண்ணாடியில் காண்பது போன்றும், விடுகதையை அறிவது போன்றும் தான் சத்தியத்தை அறிய முடிந்தது.

7. அறிவும் குறைவுள்ளதாக இருந்தது.

8. விசுவாசம். நம்பிக்கை, அன்பு, இம்மூன்றும் நிலைத்திருந்தன.

**ஆனால் நிறைவானது வரும் பொழுது :**

1. நீர்க்கதரிசனங்கள் ஒழிந்து போகும்.
2. அந்நிய பாஷைகள் ஓய்ந்து போகும்.
3. அறிவும் ஒழிந்து போகும்.
4. குறைவானது நீக்கப்படும்.
5. குழந்தைக்குரியவைகள் முடிவடைந்துவிடும்.
6. நாம் முகமுகமாய் காண்போம்.
7. நாம் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்து கொள்ளுவோம்

8. விசுவாசம், நம்பிக்கை அன்பு இம்மூன்றும் தொடர்ந்து நிலைத்திருக்கும் இதில் விசுவாசம், நம்பிக்கை இவ்விரண்டும் இந்த யுகம் முழுவதும் நிலைத்திருக்கும். ஆனால் அன்பு சதாகாலமும் நிலைத்திருக்கும். கர்த்தரின் வருகையில் அவரையே நாம் தரிசிப்பதினால் விசுவாசமும், நாம் எதிர்பார்த்திருப்பதைப் பெற்றுக் கொள்ளுவதினால் நம்பிக்கையும் நிறைவேறிவிடும். அதன் பின்னர் நாம் தரிசிப்பதை விசுவாசிக்க வேண்டியதென்ன? பெற்றுக் கொண்டதற்காக ஏன் நம்பிக்கையுடன் எதிர்பார்க்க வேண்டும்? ஆனால், அன்பு நித்தியகாலமும் மாறாதகாக நிலைத்திருக்கும். ஏனெனில் ,தேவன் அன்பாகவே இருக்கிறார். அவர் நித்தியமானவராகையால் அன்பும் நித்தியமாக நிலைத்திருக்கும்.

இவ்வாறு, விசுவாசமும், நம்பிக்கையும் கர்த்தரின் வருகையில் ஒழிந்துவிடுமானல் தீர்க்கதரிசனங்கள், அந்நிய பாஷைகள், அற்புதமான அறிவு ஆகியவை முன்பே ஒழிந்து போயிருக்க வேண்டும். ஏனென்றால், அவற்றின் வேலை முடிந்தவுடன் அனவ நின்று போயிருக்கவேண்டும். அது வெகுகாலத்திற்கு முன்பே நிறைவேறி விட்டது. ஆகையால் அவற்றிற்குத் தேவை இப்பொழுதில்லை.

இவ்விதமாகப் புரிந்து கொண்டால்தான். இந்த அதிகாரத்தின் பொருளும்' நோக்கமும் பொருத்தமானதாக இருக்கும். ''அதிக மேன்மையான வழியையும் உங்களுக்கு காண்பிக்கிறேன்'' என்று கூறிய பவுல் அப்போஸ்தலன் பதிமூன்றாம் அதிகாரத்தில் பற்பல காரியங்களையும் ஒப்பிட்டு, வரங்களையும் அவற்றின்

தேவையையும், அவற்றின் நோக்கத்தையும் காலத்தையும் விளக்கிக்கூறி' அவற்றின் குறைபாடுகளைச் சுட்டிக் காண்பித்து, நிறைவானது வரும்போது அவை ஒழிந்துவிடும் என்று காண்பிக்கிறார். விசுவாசமும், நம்பிக்கையும் இந்த யுகம் முழுவதும் தேவை என்றும், பின்னர் அவையும் ஒழிந்துவிடும் என்றும் கூறுகிறார். ஆனால் அன்போ இவை எல்லாவற்றையும் விட மேலானது எக்காலமும் நிலைத்திருப்பதுமாகும். அன்பே எல்லாவற்றிற்கும் சிறந்த வழியாகும்.

''அன்பு ஒருக்காலும் அழியாது.

**வாசக அன்பர்களுக்கு சில வேண்டுகோள்கள்**

1) இதழ்கள் வருவதில் ஏதேனும் சிக்கல்கள் இருந்தால் தயவுசெய்து எங்களுக்கு ஒரு PC எழுதுங்கள்.

2) இதழ்கள் ஒன்றுக்கு மேற்பட்டு வந்தாலும்; படிக்க நேரமில்லை என்றாலும் தயவுசெய்து எங்களுக்கு திருப்பி அனுப்பி உதவுங்கள். அல்லது மற்றவர்களுக்கு கொடுத்து உதவுங்கள்.

3) எங்களுடன் தொடர்பு கொள்ளும்போது உங்கள் பதிவு எண்ணைக் குறிப்பிடுங்கள்.

**ஆசிரியர்**

# கிறிஸ்தவம் தழைத்தோங்க தடையென்ன?

கிறிஸ்துவின் ஊழியக்காரனாக விளங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியும், மனநிறைவும் அடைவதை மனிதன் அறிந்த போதிலும், கிறிஸ்து அள்ளித்தரும் அளவற்ற ஆசீர்வாதங்களை அடைய ஆர்வமற்ற மக்கள் பலரை சந்திக்கும்போது ''இவர்களை தடை செய்யும் சக்தி யாது?'' என்ற வினாவுக்கு விடைகாண வேண்டியவர்களாக இருக்கிறோம்

**சத்திய வழியை அடைத்து, தவறான பாதைக்கு திசை திருப்பும் கள்ள போதகர்கள்**

இது பற்றி வேதாகமத்தில் நாம் எச்சரிக்கப்பட்டிள்ளோம். ''கள்ளத்தீர்க்கத்தரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள்; அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப் பண்ணி, தங்களை கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக் கொள்ளுவார்கள்''-11 பேதுரு 2:1. ''அவர்களை விட்டு விடுங்கள், அவர்கள் குருடருக்கு வழிகாட்டுசிற குருடராயிருக்கிறார்கள்; குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்களே'' -மத். 15:14

**சிற்றின்பத்தை சிறிது நேரம் தரும் பாவப்படுகுழியில் விழுந்து கிடக்கும் பரிதாப நிலையில் பலர்**

பாவத்தில் இன்பமில்லை என்று சொன்னால் அது பொய்! ஆம், பாவத்தில் இன்பமுன்டு, ஆனாலும் பாவம் தரும் இன்பம் நொடிப் பொழுதிலே மறைந்து போகிறது (எபி 11-24,25) இக்குறுகிய கால இன்பத்தால் இழுக்கப்பட்ட பலர் தேவனை விட்டு விலகிப் போகின்றனர் ''முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக் கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால், அவனும் பலனற்றுப் போவான்'' -மத். 13:23

**கால தாமதத்தால் கிறிஸ்துவின் கருணையை புறக்கணித்து கரை சேருத மக்கள்**

ஆத்தும இரட்சிப்பின் அவசியம் பற்றி என்னிடம் அறிவுரை பெற்ற மக்கள் அநேகருண்டு. தேவனுடைய திட்டத்தை அவர்கள் அறிவார்கள். அதை நடைமுறைப் படுத்தவும் அவர்களிடம் திட்டம் உண்டு. ஆனால் அதற்கான 'நல்ல நாள்' இன்னும் அவர்களுக்கு வரவில்லை என்பதே வேதனையான காரியம். என்றாலும் தேவனுடைய வசனத்தின்படி ''இதோ இப்பொழுது அநுகிரக காலம். இப்பொழுது இரட்சண்யநாள் ''— (2 கொரி 5;2) இன்றே செயல்படுவீர் ஏனெனில் நாளை நமது நாள் அல்ல!

**ஜெரி பாபர்** **தமிழில் S.S. ராஜன்**

YOUR ATTENTION PLEASE!

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9: 00 to 9: 5 P. M.
Fridays - 7:45 to 8: 00 P. M.

**HINDI** Satya Susasamachar-Speaker : Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi- 110049
Thursdays-9: 00 to 9-15 P. M.
Fridyas-- 9: 00 to 9:15 P. M.
Tuesdays-9 00 to 9:5 P. M.
Sundays-12 45 to 1: 00 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2:15 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker : Robert Rathnakar
Box No 448, Bangalore 560004
Sundays-1:45 to 2:00 P. M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are avilable in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

## வாசக அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

1) இதழ்கள் வருவதில் ஏதேனும் சிக்கல்கள் இருந்தால் தயவுசெய்து எங்களுக்கு ஒரு P.C. எழுதுங்கள்.

2) இதழ்கள் ஒன்றுக்கு மேற்பட்டு வந்தாலும், படிக்க நேரமில்லை என்றாலும் தயவுசெய்து எங்களுக்கு திருப்பி அனுப்பி உதவுங்கள். அல்லது மற்றவர்களுக்குக் கொடுத்து உதவுங்கள்-

3) எங்களுடன் தொடர்பு கொள்ளும் போது உங்கள் பதிவு எண்ணைக் குறிப்பிடுங்கள்,

ஆசிரியர்

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press Erode-638 003.

Editor. E.Z. Selvanayagam.

PRINTED MATTER BOOK-POST

TO

undelivered please return to:

The Editor

THIRUMARAI AASAAN

Post Box No: 58 ERODE-638 001